1973 நவம்பர் 28]

Applications for Central Pension for Freedom Fighters

* 450 Q.—Dr. H. V. HANDE: Will the Hon. the Chief Minister be pleased to state:

(a) the total number of applications received by this Government for Central Freedom Fighters Pension;

(b) the total number of applications forwarded to the Central Government; and

(c) the total number of applications pending with this Government?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) 8,779.

(இ) 5,333.

(உ) 3,446.

அரசிடம் உள்ளவை—435.

மாவட்ட ஆட்சியாளர்களிடம் உள்ளவை—3,011.

திரு. ஆ. பரந்தாமன்: தலைவர் அவர்களே, விடுதலைப் போராட்டத்தில் பலர் ஈடுபட்டிருந்தும் அவர்கள் எந்தெந்தச் சிறைச்சாலைகளில் இருந்தார்கள் என்ற புள்ளிவிவரத்தைக் கொடுக்க இயலாத நிலையில் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுடைய விவகாரத்தில் அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அப்படிப்பட்டவர்களுடைய விவகாரத்தில், அவர்களுடன் இருந்து சிறைவாசம் அனுபவித்த முக்கியமானவர்கள் தருகிற நற்சான்றுகள் ஆராயப்பட்டு, அந்த அடிப்படையில் சில முடிவுகள் எடுக்கப்படுகின்றன.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, மத்திய சர்க்கார் கொடுக்கக்கூடிய பென்ஷன் தொகை ரூ. 200, மாநில சர்க்கார் கொடுக்கக்கூடிய பென்ஷன் தொகை ரூ. 75. சில பேருக்கு மாநில சர்க்காரும் மத்திய சர்க்காரும் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். இப்பொழுது மாநில அரசு 75 ரூபாயைக் குறைத்துவிட்டார்கள். அதனால் மத்திய அரசு கொடுத்துக் கொண்டிருந்த 125 ரூபாயும் அவர்களுக்குக் கிடைக்காமல்

போய்விட்டது. 75 ரூபாயை மத்திய சர்க்கார் கொடுக்கா விட்டாலும் மாநில சர்க்காராவது கொடுக்க ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாநில அரசு இந்தத் திட்டத்தை ஆரம்பித்தபோது, ஐம்பது ரூபாய் என்ற அளவில் தந்தது. பிறகு, வெள்ளி விழா ஆண்டின்போது நான் இந்த அவையில், ஐம்பது ரூபாயாக இருந்தது எழுபத்தைந்து ரூபாயாக தியாகிகள் மானியம் உயர்த்தப்படும் என்று அறிவித்தேன். அதிலிருந்து எழுபத்தைந்து ரூபாய் வீதம் அளிக்கப்பட்டு வருகிறது. ஆறு மாத காலம் சிறையில் இருந்தவர்கள் தியாகிகள் மானியம் பெறத் தகுதி படைத்தவர்கள் என்று மத்திய அரசு குறிப்பிட்டிருக்கிறது. நம்முடைய மாநில அரசு வழங்கும் தியாகிகள் மானியத்தைப் பொறுத்தவரையில், மூன்று மாத காலம் சிறையில் இருந்தால் போதும் என்று வகுத்திருக்கிறது. ஆறு மாதம் சிறையில் இருந்தவர்களுக்கு மத்திய அரசு ரூ. 200 மானியம் வழங்குவது என்று அவர்கள் முடிவு எடுத்திருக்கிறார்கள். நாம் ரூ. 75 வழங்குவது என்று முடிவு எடுத்திருக்கிறோம். அவர்கள் ரூ. 200, மத்திய அரசிடமிருந்து தொகை பெறும்போது, மாநில அரசிலிருந்து நாம் ரூ. 75 தனியாகத் தர வேண்டியதில்லை என்பதற்காகவும் இந்த 75 ரூபாயை மிச்சப்படுத்தி வேறு புதிதாகப் பலருக்கு அளிக்கலாம் என்பதற்காகவும் இந்தக் கொள்கையை வகுத்து நாம் இதை மத்திய அரசுக்கும் விவரமாக எழுதியிருக்கிறோம்.

திரு. ஏ. சி. நரசிம்மன் : மாநில அரசு கொடுக்கிற ரூ. 75-ம் கிடைக்காமல், மத்திய அரசு கொடுக்கிற ரூ. 200-ம் கிடைக்காமல் ஏற்கனவே ரூ. 75 கிடைத்துக் கொண்டிருந்தவர்கள் கூட அவர்களுக்கும் இப்போது கிடைக்காமல் நிறுத்தப்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் மத்திய அரசு கொடுத்து வந்த ரூ. 200-ம் நிறுத்தப்பட்டிருக்கிறது. எந்தவித மானியத் தொகையும் வராமல் சிலர் இருக்கிறார்கள். கொடுக்கப்பட்டு வந்த மானியம் கூட கொடுக்கப்படாமல் இருக்கிறது. இதற்குக் காரணம் என்ன என்று அறியலாமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதற்கு மத்திய அரசு தான் உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். மாநில அரசு ரூ. 75 எல்லோருக்கும் கொடுத்துக் கொண்டுதான் வந்தது.

1973 நவம்பர் 28]

விடுபட்டிருப்பவர்கள் ஆயிரம் பேர்கள் இருப்பார்கள் என்று கருதுகிறேன். மாநில அரசு ரூ. 75 கொடுக்கத் தயாராயிருக்கிறது. ஆனால் ரூ. 200 அவர்கள் கொடுக்கிற நேரத்தில் நாமும் ரூ. 75 கொடுப்பது தேவை இல்லை என்றுதான் மாநில அரசு கருதுகிறது.

திரு. கே. என். குமாரசாமி: இன்னும் பல தியாகிகளுக்கு பென்ஷன் கிடைக்காமல் அவர்களது விண்ணப்பங்கள் பைசல் செய்யப்படாமல் ஏராளமான விண்ணப்பங்கள் இருக்கின்றன. அவற்றின் பேரில் அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? தமிழ் நாடு அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு அனுப்ப என்ன செய்திருக்கிறது? தமிழ் நாடு அரசாங்கம் எவ்வளவு விண்ணப்பங்களை பெண்டிங்கில் வைத்திருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஆரம்பக் கேள்வி அதுதான். 8,779. மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்து அனுப்பி வைக்க வேண்டுமென்று வந்த விண்ணப்பங்கள் 8,779. இதில் நாம் மத்திய அரசுக்கு பரிந்துரை செய்து அனுப்பியிருப்பது 5,333. மிச்சமுள்ளவை ஆராயப்படுகிறது என்று சொன்னேன்.

திரு. தொ. க. சிறைமீட்டான்: ஆறு மாத காலம் சிறை சென்றவர்களுக்கு ஓய்வூதியம் அளிக்கிற திட்டம் இருக்கிறது என்று சொன்னார்கள். இந்த ஆறு மாதம் என்பது தொடர்பாக இருக்க வேண்டுமா அல்லது ஒரு மாதம், இரண்டு மாதம் என்று இப்படி மொத்தமாகச் சேர்த்து ஆறு மாத காலம் இருந்தால் போதுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: சிறையில் எவ்வளவு காலம் இருந்திருக்க வேண்டும் என்பதுபற்றி நண்பர் சிறைமீட்டான் அவர்கள் கேட்கிறார்கள். ஆறு மாத காலம் என்பது மத்திய அரசு வழங்குகிற மானியத்தைப் பொறுத்தது. மாநில அரசு வழங்குகிற தியாகி மானியம் பொறுத்தவரையில் மூன்று மாத காலமாவது சிறையில் இருந்திருக்க வேண்டும் என்ற நியதிதான் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. தொடர்ந்து சிறையில் இருந்தவர்களைப் பற்றித்தான் கவனிக்கப்படுகிறது.

திரு. கே. கந்தசாமி: மத்திய அரசு சுதந்திரப் போராட்ட வீரர்கள் மனுச் செய்யும் தேதி ஏதாவது குறிப்பிட்டிருக்கிறதா? அப்படி இருந்தால் இன்னும் மனுச் செய்யாதவர்கள் மனு

செய்வதற்கு வகை செய்யக்கூடிய முறையில் அவர்களுக்கும் வாய்ப்பளிக்கக்கூடிய முறையில் அந்தத் தேதியை இன்னும் சற்று விரிவுபடுத்த ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாநில அரசைப் பொறுத்தவரையில் மூன்று நான்கு தடவைகள் ஒரு தேதி வரையறுக்கப்பட்டு அந்தத் தேதி மாண்புமிகு உறுப்பினர்களின் கோரிக்கைக்கிணங்க அவை மீண்டும் நீட்டிக்கப்பட்டிருக்கிறது. மத்திய அரசைப் பொறுத்தவரையில் 15—8—73-க்குள் மனு செய்து கொண்டால் இந்த ஊதியம் பெறலாம் என்று அவர்கள் உத்தரவு கூறுகிறது. மேலும் அதை நீட்டிப்பது பற்றி மத்திய அரசுதான் பரிசிலிக்க வேண்டுமே தவிர மாநில அரசு பரிசிலிப்பதற்கு அதில் இடமில்லை.

திரு. கு. காமாட்சி: இந்த விடுதலைப் போராட்டத்திலும், மொழிப் போராட்டத்திலும் சிறை சென்றவர்கள் இவ்வளவு காலத்திற்குத்தான் சிறையில் இடுவார்கள் என்ற எண்ணத்தில் அவர்கள் போகவில்லை. ஆகவே அளவை கருத்தில்கொள்ளாமல் சிறை சென்றார்கள் என்ற ஒரே காரணத்திற்காக அவர்களுக்கும் ஊதியம் வழங்குவதற்கு அரசு பரிசிலனை செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இதுபோன்ற சலுகை சில நேரங்களில் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு மானியம் வழங்குவதில் கடைப்பிடிக்கப்பட்டிருக்கிறது. உறுப்பினர் அவர்கள் சொல்கிற கருத்தையும் மொழிப் போராட்டம், குமரி மாவட்டம் தாயகத்தோடு சேருவதற்கு நடைபெற்ற போராட்டம் இவைகள் பற்றிக் கவனிக்கிற நேரத்தில் கவனத்தில் காள்ளப்படும்.

திரு. நா. வீராசாமி: நம்முடைய தமிழக அரசு கொடுக்கிற மானியம் விடுதலை வீரர்களுக்கு ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்திற்குள்ளாக போய்ச் சேர்ந்துவிடுகிறது. மத்திய அரசு கொடுக்கிற மானியம் 30 நாட்கள், 40 நாட்கள் கழித்துதான் வருகிறது. ஆகவே மத்திய அரசிடமிருந்து மொத்தப் பணத்தையும் நாமே பெற்றுக்கொண்டு மத்திய அரசின் சார்பாக எல்லாத் தியாகிகளுக்கும் நாமே பணத்தைக் கொடுக்க நம் அரசு ஏற்பாடு செய்யுமா? காலதாமதத்தைத் தவிர்ப்பதற்காக என்று அறிய விரும்புகிறேன்.

1973 நவம்பர் 28]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இந்தத் தியாகிகள் பட்டியலைப் பரிந்துரை செய்வதில்கூட இதில் ஒரு இரட்டையாட்சி முறைதான் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தியாகிகளுக்கு மானியம் வழங்குவதில் அதுபற்றிப் பரிந்துரை செய்து தமிழக அரசு அனுப்பும்போது மத்திய அரசு பரிசிலனை செய்து யார் யாருக்கு இந்த மானியம் வழங்கலாம் என்பதில் ஒருமித்த ஒரு முடிவில்லாமல் இப்போதிருக்கிறது. நாம் ஒரு ஏழாயிரம் அல்லது எண்ணாயிரம் பேர்களை சிபார்சு செய்து அனுப்புகிறோம். அவர்கள் யார் யாரைத் தேர்ந்தெடுக்கலாம் என்று பரிசீலனை செய்கிறார்கள். அதல்லாது அவர்களாகவே நேரடியாக ஒரு ஆயிரம் இரண்டாயிரம் பேர்களுக்கு அவர்கள் வழங்குகிறார்கள். இந்நிலையில் மொத்தமாகவே எங்களிடம் பணத்தைக் கொடு என்று மத்திய அரசைக் கேட்டால் அவர்கள் இணங்க மாட்டார்கள்.

நண்பர் திரு. சிறைமீட்டான் அவர்கள் கேள்விக்குப் பதில் சொல்லும்போது தொடர்ந்து சிறையில் இருக்க வேண்டும் என்று நான் குறிப்பிட்டேன். ஆறு மாதம் என்பது தொடர்ந்து இருக்க வேண்டுமென்பதில்லை. இடையிடையே இடைவெளி இருந்தாலும் கூட அது ஆறு மாத காலமாக கணக்கில் எடுத்துக்கொள்ளப் படுவதாக மத்திய அரசு கூறுகிறது.

Price of School text books

*451 Q.—Thiru N. K. PALANISWAMY Thiru D. S. A. SIVAPRAKASAM: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state the steps taken to reduce the price of the text books supplied to the students?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பள்ளிப் பாட புத்தகங்களை வெளியிடும் தமிழ் நாடு பாடநூல் நிறுவனம், மிகக் குறைந்த விலைக்கே இப்புத்தகங்களை மாணவர்கட்கு வழங்குகிறது. புத்தகங்களின் விலை அதே தரத்திலுள்ள தனியார் புத்தகங்களின் விலையை விடக் குறைவாகவே உள்ளது.

திரு. என். கே. பழனிசாமி: இந்தப் புத்தகங்களை தனியார் ப்ரின்ட் செய்து வெளியிடுகிறார்கள். ஆகவே, அவை அதிகப் படியான விலைக்கு விற்கப்படுகிறது. தகுந்த சமயத்தில்